பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 05 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் அனந்தநாக் - ரஜோரி மக்களவைத் தொகுதி தேர்தல் வரும் 25-ஆம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2. மக்களவைக்கு மூன்றாம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 95 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

3. மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் மேலும் நான்கு பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

4. இந்தியா — பங்ளாதேஷ் இடையே நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் மத்திய அரசின் நான்கு பேர் கொண்ட குழு அந்நாட்டு அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளது.

5. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டிகளை இந்தியா நடத்தவுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் அனந்தநாக் - ரஜோரி மக்களவைத் தொகுதி தேர்தல் தேதியில் மாற்றம் செய்யப்பட்ள்ளது.

அந்த தொகுதியில் வரும் ஏழாம் தேதிக்குப் பதிலாக 25-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தள்ளது.

ஏற்கனவே இந்த தொகுதியில் மூன்றாம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவிருந்த நிலையில் தற்போது ஆறாம் கட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடமிருந்து வந்த கோரிக்கையின் அடிப்படையில் தேர்தல் தேதி மாற்றப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது,

**[]<<<>>>[]**

மக்களவைக்கு முதல் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குப்பதிவு விகிதங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இதன்படி முதல்கட்டமாக 66 புள்ளி ஒன்று நான்கு சதவீதமும், இரண்டாவது கட்டமாக 66 புள்ளி ஏழு ஒன்று சதவீதமும் வாக்குகள் பதிவாகி இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முதல்கட்ட வாக்குப்பதிவில் 66 புள்ளி இரண்டு இரண்டு சதவீத ஆண்களும், 66 புள்ளி பூஜ்ஜியம் ஏழு சதவீத பெண்களும் வாக்களித்துள்ளனர்.

இதேபோல் இரண்டாம் கட்ட தேர்தலில் ஆண் வாக்காளர்கள் 66 புள்ளி ஒன்பது ஒன்பது சதவீதம் பேரும், பெண் வாக்காளர்கள் 66 புள்ளி நான்கு இரண்டு சதவீதம் பேரும் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதனிடையே மூன்றாவது கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஸ்குமார், திரு சுக்பீர்சிங் சாந்து ஆகியோரும் பங்கேற்ற இந்த கூட்டத்தில் மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளின் 265 தேர்தல் பார்வையாளர்கள் காணொலி வாயிலாக கலந்து கொண்டனர்.

இதனிடையே மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 95 தொகுதிகளில் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில் அந்த தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திரமோடி தெலங்கான மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

இன்றும் நாளையும் குஜராத் மாநிலத்தில் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் அவர் பங்கேற்று வாக்கு சேகரிக்கவுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே சத்திஷ்கர் மாநிலம் சம்பா தொகுதியில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

இதேபோல் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி மத்திய பிரதேச மாநிலம் பிண்ட் தொகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார்.

ஐக்கிய ஜனதாதள தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார் மாதேப்புறா தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் தமது கட்சி மற்றும் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்தார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் மேலும் நான்கு பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

ஹரியானா மாநிலம் குர்கான் தொகுதியில் நடிகர் ராஜ்பப்பரும், இமாச்சல பிரதேசம் காங்ரா தொகுதியில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு ஆனந்த் சர்மாவும், போட்டியிடுகின்றனர்.

**[]<<<>>>[]**

இந்திய விமானப்படையின் போர் திறன் சக்தியை வெளிப்படுத்தும் வகையிலான நிகழ்ச்சியில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நேற்று பங்கேற்றார்.

விமானப்படையின் ஒருங்கிணைந்த திறன், அரசின் ஒட்டுமொத்த அணுகுமுறையை அறிந்து செயல்படுதல் போன்ற திறன்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக விமானப்படையின் சமூக வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை உயரதிகாரிகள் தவிர ராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

தொழிலாளர்கள் தினமான மே தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலையை உறுதி செய்த நிகழ்வை கொண்டாடும் வகையில் இந்நாள் ஆண்டுதோறும் தொழிலாளர் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மே தினத்தையொட்டி தலைவர்கள் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உத்திரபிரதேச மாநிலம் அயோத்தி செல்கிறார்.

அங்கு அருள்மிகு அனுமான் கோவில், ராமர்கோவிலில் அவர் சிறப்பு வழிபாடு செய்கிறார்.

சரையூ பூஜை மற்றும் ஆரத்தி நிகழ்ச்சிகளிலும் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்றத்தின் புதிய இணையதளம் இன்று முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

இதில் வழக்கு மற்றும் தீர்ப்பு விவரங்கள் எளிதாக கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த இணையதளத்தின் மூலம் வழக்கின் விசாரணைகளை நேரலையில் பார்வையிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக புதிய இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.,

**[]<<<>>>[]**

காவிரியில் கர்நாடகம் வழங்க வேண்டிய தண்ணீரில் மீதம் உள்ள 95 டி எம் சி நீரை உடனடியாக விடுவிக்க வேண்டுமென காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டம் அதன் தலைவர் திரு வினித் குப்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த கூட்டத்தில் தமிழகம், கர்நாடகம், கேரளா, புதுச்சேரி மாநிலங்களின் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

தமிழகத்தின் சார்பில் காவிரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர் திரு சுப்ரமணியன் கலந்து கொண்டு, காவிரியில் மாநிலத்துக்கு கடந்த மாதம் வரை வழங்க வேண்டிய தண்ணீரை விடுவிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இதுவரை வழங்க வேண்டிய 174 டி எம் சி தண்ணீரில் 78

டி எம் சி தண்ணீர் மட்டுமே கர்நாடக அணைகளிலிருந்து வந்துள்ளதாகவும், எஞ்சியுள்ள நீரை உடனடியாக விடுவிக்க ஒழுங்காற்றுக்குழு கர்நாடக அரசுக்கு அறிவுறுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

குழுவின் அடுத்தக் கூட்டம் வரும் 16-ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா – பங்ளாதேஷ் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறையைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழு அந்நாட்டிற்கு சென்றுள்ளது.

துறையின் செயலாளர் திரு வி சீனிவாஸ் தலைமையிலான இந்த குழுவினர், டாக்காவில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லாட்சிக்கான தேசிய மையம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பிப்பது குறித்து விரிவான ஆலோசனை நடத்தினர்.

இந்த ஒப்பந்தம் வரும் 2029-ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தும் வகையில் புதுப்பிக்கப்படவுள்ளது.

பங்ளாதேஷ் நாட்டின் அரசு உயரதிகாரிகளின் நிர்வாக திட்டங்கள் குறித்தும் இந்திய குழுவினர் அப்போது ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தென்சீன கடலில் சர்ச்சைக்குரிய பகுதியில் தங்கள் நாட்டு படகுகளை சீன கடலோர காவல்படையினர் சேதப்படுத்தியதாக பிலிப்பைன்ஸ் குற்றம்சாட்டியுள்ளது.

**Scarvorough shoal** பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டின் இரண்டு கடலோர காவல்படையின் படகுகளை சீன படையினர் சேதப்படுத்தியதற்கு பிலிப்பைன்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த பகுதியில் எந்த ஒரு நாடும் இறையாண்மையை கொண்டிருக்க முடியாது என்றும், அது தங்கள் நாட்டின் தனிப்பட்ட பொருளாதார மண்டலம் என்றும் பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக அழிக்கும் வகையில் தெற்கு காஸா நகரான ரஃபா-வில் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தும் என்று அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.,

ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் உள்ள பிணை கைதிகளை விடுவிப்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெற்றபோதிலும், வெற்றியை உறுதி செய்யும் வகையில் இஸ்ரேல்படைகள் ரஃபா பகுதிக்குள் நுழையும் என்று அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு நடைபெவுள்ள உலக பேட்மிண்டன் ஜூனியர் சாம்பியன் போட்டிகளை இந்தியா நடத்தவுள்ளது.

ஹவுகாத்தியில் உள்ள தேசிய மையத்தில் இந்த போட்டிகள் நடைபெறும் என்று உலக பேட்மிண்டன் சம்மேளன தலைவர் திரு **Poul Erik** தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பேட்மிண்டன் திறன் மேம்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு இப்போட்டிகள் அங்கு நடத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

இரண்டாவது முறையாக இப்போட்டிகள் இந்தியாவில் நடைபெறவுள்ளன.

போட்டி அட்டவணை பின்னர் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ அணி நான்கு விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 144 ரன் எடுத்தது.

145 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பிள்ளர் களமிறங்கிய லக்னோ அணி 19 புள்ளி இரண்டு ஓவரில் வெற்றி இலக்கை எட்டியது.

அந்த அணியின் ஸ்டாய்னிஸ் 45 பந்துகளில் 65 ரன் சேர்ந்தார்.

இந்த வெற்றியின் மூலம் லக்னோ அணி புள்ளிகள் பட்டியலில் ஐந்தாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 19 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Sylhet–** யில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பங்ளாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 119 ரன் எடுத்தது.

120 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா ஐந்து புள்ளி இரண்டு ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்க 47 ரன் எடுத்திருந்த நிலயில் மழை காரணமாக ஆட்டம் தடைபட்டது.

இதையடுத்து டக்வொர்த் லூயீஸ் முறைப்படி இந்தியா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இரண்டு போட்டிகளில் இந்தியா வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

***End of News***